Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.6 (LW.8)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகையன் | ஜாதி | : | |
| த/பெ | : | வெள்ளைச்சாமி | தொழில் | : | (ஓய்வு) வனவர், கன்னிவாடி வனச்சரகம் |
| கிராமம் | : | திருப்பரங்குன்றம் | சமயம் | : | |
| தாலுகா | : | திருப்பரங்குன்றம் | வயது | : | 71/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2025.

( A3, A7, A9, A10 ஆஜர் . A1, A2, A4, A5, A11, A14 ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. A6, A8, A12, A13 are died)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனவராக வேலை பார்த்து ஓய்வு பெற்று, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கட்டுப்பட்ட செம்பட்டி பிரிவு பெரியூர் பீட்டில் வனக்காப்பளாராக வேலை பார்த்தபோது, எங்களது செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன் என்பவர் அன்றையதினம் சுமார் 04.00 மணியளவில் செம்பட்டி வனப்பிரிவிற்கு வரச்சொல்லி நானும், வனக்காவலர் சாமியப்பன், மகேந்திரன், வனக்காப்பளர் ராஜாராம், வனக்காப்பளர் ஞான பாலமுருகன் ஆகியோர்கள் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்தோம்.

அப்போது அங்கிருந்த கன்னிவாடி வனச்சரக அலுவலர் தோணிமலை பகுதியில் ராஜசேகரன் காட்டில் தோதகத்தி மரங்களை சில நபர்கள் வெட்டிக்கொண்டிருப்பதாகவும், அந்த நபர்களை பிடித்து வரச்சொன்னார். வனவர் பிச்சை, வனக்காப்பளர் ஞானபாலமுருகன், வனக்காப்பளர் ராஜாராம், வனக்காப்பளர் சேர்வராயன், வனக்காவலர் சாமிக்கண்ணு ஆகியோருடன் நானும் சேர்ந்து அன்றையதினம் சுமார் 05.00 மணியளவில் தோணிமலை பகுதியில் ராஜசேகரன் காட்டிற்கு சென்று பார்த்தபோது, 7 நபர்கள் தோதகத்தி மரங்களை

வெட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த 7 நபர்களை நாங்கள் பிடித்தோம். அப்போது அவர்கள் வெட்ட பயன்படுத்திய 2 ரம்பங்கள், 2 கோடாரிகள், ஒரு அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். அப்போது அவர்கள் வெட்டிய 28 தோதகத்தி கட்டைகள், 2 உருட்டு கட்டைகள் ஆகியவற்றை கைப்பற்றி வனவர் பிச்சை ஸ்தலமகசர் தயார் செய்தார். அந்த ஸ்தலமகசரில் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தலமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துகளில் என்னுடைய கையெழுத்து முருகையா என்று கையெழுத்து செய்துள்ளேன். அந்த ஸ்தலமகசரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.23/PW.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி கைப்பற்றிய தோதகத்தி மரங்களை அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து, அவரிடம் ஒப்படைத்ததற்கான கடிதம் பெற்றோம். அதே இடத்தில் வைத்து எதிரிகளில் ஒரவரான ராஜேந்திரன் என்பவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **(அ.சா.ஆ.24/PW.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் அனைவரையும் அழைத்துக்கொண்டு கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்துவிட்டோம். அன்றையதினம் இரவு எதிரிகளை எங்களது கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வைத்துவிட்டு, மறுநாள் காலையில் நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor